**சுருக்கம்**

வேளாண்மை–உழவர் நலத்துறை – அறிவிப்புகள் 2021–22 – பனை மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் பனை மரத்தில் புதுமையான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் மூலம் குறு விவசாயிகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காக ரூ.50.00 இலட்சம் நிதி ஒப்பளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை–உழவர் நலத் (தோ.க1.2) துறை**

**அரசாணை (நிலை) எண் 227** **நாள் 06.12.2021**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**பிலவ வருடம், கார்த்திகை 20**

**படிக்கப்பட்டது:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரின் கடிதம் நாள் 11.10.2021

-----

**ஆணை:**

14.8.2021 அன்று வேளாண்மைத்துறையின் நிதிநிலை அறிக்கையின் போது மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பிறவற்றுடன் பின்வரும் அறிவிப்பினை மேற்கொண்டுள்ளார்கள்:–

"பனை மேம்பாட்டு இயக்கம் 3 கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்"

**பனை மேம்பாட்டு இயக்கம்**

- பனைமரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக நடப்பாண்டில் 30 மாவட்டங்களில், 76 இலட்சம் பனை விதைகளை முழு மானியத்தில் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் (ரூ.1.00 கோடி).
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படும் கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பனை மரம் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் (ரூ.50.00 இலட்சம்).
- பனை வெல்லம் உற்பத்தி தொடர்பான நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, தரமான பனை வெல்லம் தயாரிப்பதற்கு விவசாயிகளுக்கு உரிய பயிற்சியும் பனங்கருப்பட்டி காய்ச்சல் நவீன இயந்திரம் கொள்முதல் செய்திட மானியமும் வழங்கப்படும் (ரூ.50.00 இலட்சம்).

2. மேற்சொன்ன அறிவிப்பை செயல்படுத்தும் பொருட்டு பார்வையில் காணும் கடிதத்தில், தமிழ்நாடு பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் பனை மரத்தில் புதுமையான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் மூலம் குறு விவசாயிகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காக ரூ.50.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்க வேண்டி திட்டத்திற்கான பொருள்வாரியான விவரங்கள் அடங்கிய கருத்துருவினை கீழ்க்கண்டவாறு அனுப்பியுள்ளார். மேலும், பனை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் பின்னணி, அடிப்படை, குறிக்கோள், திட்ட காலவரையறை, செயல்பாடுகள் மற்றும் பயனாளிகள் ஆகியவற்றினை இணைப்பில் காணலாம்.

| வ. எண் | பொருள் | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| I. | கிள்ளிகுளம் பனை ஆராய்ச்சிக் கூடத்தை புதுப்பித்தல் | 10.00 |
| II. | தற்காலிக செலவினங்கள் | |
| 1. | முதுநிலை ஆராய்ச்சியாளர் – 2 நபர்கள் (தோட்டக்கலை, உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து) ரூ.35,000/– மாதத்திற்கு | 12.60 |
| 2. | திறமையான தொழிலாளர்கள் – 3 நபர்கள் ரூ.10,000/– மாதத்திற்கு | 7.20 |
| 3. | வேதியியல் பொருட்கள் வினையூக்கிகள், கொள்கலன்கள் மற்றும் ஆராய்ச்சி பொருட்கள் | 3.20 |
| 4. | சொட்டுநீர் பாசன ஆராய்ச்சித் திடல் அமைத்தல் | 2.00 |
| 5. | மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பதற்கு மற்றும் தரம் ஆராய்தலுக்கு தேவையான இடுபொருட்கள் | 3.00 |
| 6. | பனை ஏறும் கருவி வடிவமைத்து உருவாக்குவதற்கு தேவையான செலவினங்கள் | 6.00 |
| 7. | விழிப்புணர்வு பயிற்சி 5 எண்ணிக்கை ஒரு வருடம் 50 விவசாயிகள் ஒரு பயிற்சிக்கு | 3.00 |
| 8. | பயண செலவு | 3.00 |
| | **மொத்தம் (I + II)** | **50.00** |

3. தமிழ்நாடு பல்கலைக் கழகத் துணைவேந்தரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, "பனைமரத்தில் புதுமையான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்கள் மூலம் குறு விவசாயிகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காக ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2415 – வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் – 01 – பயிர் வளர்ப்பு – 120 – ஏனைய நிறுவனங்களுக்கு நிதியுதவி – மாநிலச் செலவினங்கள் – AB – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு உதவித் தொகை – 309 – உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு–2415 01 120 AB 30903)–ரூ.50.00 இலட்சம்

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதியொதுக்கம் ரூ.50,00,000/– 2021–2022–ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள இணை வேளாண்மை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2021–2022ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். இச்செலவினத்தை 2021–2022–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு ஏதுவாக தனித்தனியாக கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொ.–1)/வேளாண்மை–உழவர் நலத்) துறைக்கு அனுப்புமாறு துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேற்சொன்ன திட்டத்தினை செயல்படுத்த மேலே பத்தி – 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினமான, ரூ.50,00,000/– நிதியினை இணை வேளாண்மை இயக்குநர், கோயம்புத்தூர் பெற்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு வழங்கிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண் 53956A/நிதி (வே.உ.ந) / 2021, நாள் 03.12.2021, மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1049–ல் ஆயிரத்து நாற்பத்தொன்பது) பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

பெறுநர்

துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்–641 003.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, சென்னை–5.
வேளாண்மை இயக்குநர், சென்னை–5.
இணை வேளாண்மை இயக்குநர், கோயம்புத்தூர்–641 003.
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை–18.

முதன்மை மாநில கணக்காயர் (E&RSA), சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை –9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் (ம) அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை–உழவர் நலத் துறை, சென்னை – 9.
நிதித்(வே–உந/வ.செ.பொ.1/வ.வ.து) துறை, சென்னை– 9.
வேளாண்மை–உழவர் நலத் (அநமு3 / வ மற்றும் தி) துறை, சென்னை.9
உதவி நிரலர், வேளாண்மை–உழவர் நலத்துறை, சென்னை – 9.
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.22310/தோ.க.1.2/2021.
இருப்புக் கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

6.12.21
பிரிவு அலுவலர்
6.12.21

## இணைப்பு

[அரசாணை (நிலை) எண் 227, வேளாண்மை–உழவர் நலத் (தோ.க.1–2) துறை, நாள் 06.12.2021]

**திட்டத்தின் பின்னணி:**

உலகில் காணப்படும் பனை மரங்களில் இந்திய தேசத்தில் மிகவும் அதிகமாக 85.1 மில்லியன் மரங்கள் காணப்படுகின்றன. இவற்றில் தமிழ் நாட்டில் தான் 60 விழுக்காட்டிற்கும் (51.0 மில்லியன்) அதிகமான மரங்கள் காணப்படுகின்றன. தமிழகத்தில் தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அதிக அளவில் பனை மரங்கள் காணப்படுகின்றன. பனை உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் தொழில்கள் மூலம் நாட்டின் உணவு தன்னிறைவு, வாழ்வாதார முன்னேற்றம் மற்றும் சூழ்நிலை பாதுகாப்பை உறுதி செய்யலாம். தமிழக மாநில மரமான பனை, சொல் வழக்கில் பனைமரம் என அறியப்படுகிறது. இத்தகைய சிறப்புடைய பனைமரம் உலகமயமாதல், தொழில் மயமாதல், நகரமயமாதல் மற்றும் பழக்க வழக்க மாறுபாடு போன்றவற்றால் தமிழ்நாட்டில் மிகவும் விரைந்து அழிந்து வருகிறது. எனவே இந்த மரத்தை எதிர்கால தலைமுறைக்காக பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது.

**திட்டத்தின் அடிப்படை:**

ஒருவித்திலை தாவரமான பனை பொருளாதாரத்தில் முக்கியமான மரம் எனினும் அதனுடைய இனவிருத்தியில் உள்ள காரணங்களால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. விதைத்த பின் பனை விதைகள் 40 முதல் 60 நாட்களில் முளைக்க ஆரம்பித்து முதல் இலை விரிவதற்கு 150 நாட்கள் (5 மாதங்கள்) வரை எடுத்துக் கொள்கிறது. குறைந்த முளைப்புத்திறன், நீண்ட நாட்கள் கழித்து முளைத்தல் மற்றும் நீண்ட நாற்றங்கால் பருவம் போன்றவை பனை விதை முளைப்பதில் உள்ள குறைபாடுகளாகும். பனங்கொட்டையை மூடியுள்ள கடினமான கல்போன்ற வெளி உறை விதைகள் நீர் உறிவதற்கு தடையாக இருப்பதால் விதை கருவளர்ச்சி தடைப்பட்டு முளைப்பு தாமதப்படுகிறது. ஆகவே பனையினுடைய இனவிருத்தித் தொழில்நுட்பங்களை பற்றிய ஆய்வுகள் அவசியமாகிறது.

மேலும் பனையில் ஆண், பெண் மரங்கள் தனித்தனியே இருப்பதாலும் பூப்பதற்கு நீண்ட காலம் (பல வருடங்கள்) எடுத்துக் கொள்வதாலும் விவசாயிகள் பனை மரத்தை நடுவதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். மேற்கூறிய காரணங்களால் பனை மரம் அழிந்து கொண்டிருப்பதால் அதனைத் தடுத்து பனை சாகுபடிக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டியதும் அவசியமாகிறது.

பனை மெதுவாக வளரும் மரப்பயிர் ஆகையால் இவை பூப்பதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொள்கின்றன. பல்லாண்டு மரங்களில் வளர்ச்சிக் குறைப்பான்கள்

பயன்படுத்துவதால் மரங்களின் வளர்ச்சி குறைந்து மகசூல் அதிகரிப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சிக் குறைப்பான்கள் பயிரின் வளர்ச்சி, கனு இடைவெளி மற்றும் இலைப்பரப்பு ஆகியவற்றைக் குறைத்து மரங்கள் பூப்பதைத் தூண்டுகின்றன. வளர்ச்சிக் குறைப்பான்களின் செயல்பாடு பயன்படுத்தும் இராசயன பொருள், அவற்றின் அளவு, தெளிக்கும் பருவம், பயிர் வகை, பயிர் வயது மற்றும் பயிரின் வீரியத்தைப் பொருத்தது. பனை மரத்தில் வளர்ச்சி குறைப்பான் பயன்பாட்டினை நிர்ணயம் செய்வதன் மூலம் பனை மரங்கள் பூப்பதை தூண்டலாம். கடந்த சில ஆண்டுகளாக, பனை மரத்தினை குறித்த ஒரு வேட்கை சமூக ஆர்வலர்களிடம் அதிகரித்து வருகிறது. பனையை நட்டதிலிருந்து அதன் விளைபொருள்களை சந்தைப்படுத்துவது மற்றும் அவற்றை பதப்படுத்துவது வரை பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் கடந்த ஆண்டுகளில் பனை மரங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால் பதநீர் எடுக்க பனை ஏறுவோரின் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்து வருகிறது. பனை ஏறுதலில் ஈட்டப்படும் மிகக் குறைந்த வருமானமும் இதற்கு முக்கிய காரணமாகும். இதற்கு பனை ஏறுதலை இயந்திரமயமாக்குதல் நல்ல தீர்வாகும்.

பனையிலிருந்து பெறப்படும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான குளிர்பானங்கள், பனங்கருப்பட்டி, பனைசர்க்கரை, பனங்கற்கண்டு போன்றவற்றிற்கு உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல சந்தை வாய்ப்பு நிலவுகிறது. இத்தகைய மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் இந்திய தொழில்நுட்பங்கள் மற்றும் நம்முடைய இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்படுகின்றன. பனைப் பொருட்களுக்கு நல்ல சந்தை வாய்ப்பு இருந்தும் தொழில்நுட்பக் குறைபாடுகளால் இவை பிரபலமாகவில்லை. எனவே போதிய ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்வதன் மூலம் குறு பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களைத் தொழில் முனைவோராக மாற்றலாம்.

**திட்டத்தின் குறிக்கோள்கள்:**

- பனை நாற்றாங்கால் தொழில்நுட்பங்களை ஆராய்ச்சி மூலம் உறுதிப்படுத்துதல் (கொள்கலன்களில் நாற்றுக்களை உற்பத்தி செய்தல்)
- வளர்ச்சி ஊக்கிகளை பயன்படுத்தி விரைவில் பூக்க வைத்தல்
- பனை மரம் ஏறும் கருவியை உருவாக்குதல்
- தரமான மதிப்பு கூட்டப்பட்ட பனைப்பொருட்களை அதிகப்படுத்தல்

**திட்டத்தை செயல்படுத்துவதற்கான காலவரையறை:** 2021-22 மற்றும் 2022-23

**திட்டத்தின் செயல்பாடுகள்:**

**நோக்கம் -1** பனை நாற்றாங்கால் தொழில்நுட்பங்களை ஆராய்ச்சி மூலம் உறுதிப்படுத்துதல் (கொள்கலன்களில் நாற்றுக்களை உற்பத்தி செய்தல்)

- விதை முளைப்புத்திறனை அதிகரிக்க மற்றும் விரைவுபடுத்த விதைப்பதற்கு முன் ஆய்வுகள் மேற்கொள்ளுதல்
- விதை விதைப்பதற்கு ஏற்ற சரியான ஊடகத்தை கண்டறிவதற்கான ஆய்வு மேற்கொள்ளுதல்
- நாற்றுக்களை எளிதில் கையாளுவதற்கு மற்றும் போக்குவரத்திற்கு ஏற்ற சிறந்த கொள்கலன்களை தெரிவு செய்வதற்கான ஆய்வுகள்

<u>நோக்கம் – 2</u> வளர்ச்சி ஊக்கிகளைப் பயன்படுத்தி விரைவில் பூக்க வைத்தல்

- சொட்டுநீர்ப் பாசன வசதியினை பனைமரங்களுக்கும் ஏற்படுத்துதல்
- வெவ்வேறு வயதுடைய பனை மரங்களை ஆராய்ச்சிக்காகத் தெரிவு செய்தல்
- தெரிவு செய்யப்பட்ட பனை மரங்களில் வளர்ச்சியூக்கிகளைத் தெளித்து ஆய்வுக்கு உட்படுத்துதல்
- தெரிவு செய்த வளர்ச்சியூக்கியை பெரிய அளவில் சோதனை செய்தல்

<u>நோக்கம் – 3</u> பனை மரம் ஏறும் கருவியை உருவாக்குதல்

- பனை மரம் ஏறும் கருவியினை வடிவமைத்தல்
- பயன்பாட்டுக்கு ஏற்ற பனை ஏறும் கருவியினை உருவாக்குதல்
- பனை ஏறும் கருவியினை நிலத்தில் ஆய்வு செய்தல்
- குறைபாடுகள் இருந்தால் அவற்றைக் களைதல்

<u>நோக்கம் – 4</u> தரமான மதிப்பு கூட்டப்பட்ட பனைப் பொருட்களை உருவாக்கும் தொழில்நுட்பங்களை கண்டறிதல்

- உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்ற தரமான பனை சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்குதல் .
- வேளாண் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் சுய தொழில் செய்ய முனைவோர்க்கு பனை சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்குதலில் பயிற்சி அளித்தல்.

**பயனாளிகள்:**

மதிப்பு கூட்டப்பட்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, தரம் வாய்ந்த பனை பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். மதிப்பு கூட்டுதல் மூலம் சுய உதவி குழுக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துதல், பனை விவசாயிகளை பாதுகாத்தல் மற்றும் பனை விவசாய உற்பத்தி நிறுவனங்களை (FPO) அதிகப்படுத்துதல். விழிப்புணர்வுப் பயிற்சிகள் மூலம் சுமார் 300 பனை விவசாயிகள் பயிற்சி பெற்று பயன் அடைவதோடு அவர்களின் சமூக பொருளாதார நிலை உயர்த்தப்படுகிறது.

**திட்டத்தின் பயன்கள்:**

- நாற்றங்கால் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, அதிவேகமாக நாற்றுக்களை உற்பத்தி செய்தல், நாற்றுகளின் முளைப்புத்திறன் மேம்படுத்துதல் மூலம் பனை நாற்றுக்களை எளிதாகக் கையாள முடியும் மற்றும் தரமான, ஒரே சீரான நாற்றுக்களை உருவாக்குதல்.
- மிக அதிகவேக பூக்க வைக்கும் தொழில்நுட்பத்தின் மூலம், இளநிலை பருவத்தை குறைத்து வேகமாக பூக்கக் கூடிய தன்மையை உருவாக்க வாய்ப்பு உள்ளது. பனை விவசாயிகளுக்கு விரைவான மகசூல் மற்றும் வருமானம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இதனால் பனைசாகுபடி பரப்பு அதிகப்படும். ஆண் மற்றும் பெண் மரங்களை விரைவில் கண்டறிய முடியும் மற்றும் விளைவிப்பதற்கான செலவினத்தை குறைக்க வாய்ப்புள்ளது.
- பனை ஏறும் கருவியை கண்டறிதல் மூலம் பனை பறிப்பதற்கு உள்ள சிரமங்களை குறைக்க வாய்ப்புள்ளது.
- பனை சார்ந்த பொருட்களை வருடம் முழுவதும் பயன்படுத்த முடியும்.
- மதிப்புக் கூட்டப்பட்ட, தரம் மிகுந்த நுங்குஜாம், பனைத்தேன், கருப்பட்டி, பனங்கற்கண்டு, பழச்சாறு பொருட்களை உருவாக்கலாம் மற்றும் பனை மரத்தின் வீணான பாகங்களை மதிப்பு கூட்ட வாய்ப்பு உள்ளது.
- அதிக காலத்திற்கு பதநீரை (30 நாள் வரை) மற்றும் மதிப்பூட்டப்பட்ட பொருட்களை சேமித்து வைக்கலாம்.
- மதிப்பூட்டப்பட்ட பொருட்களை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் சந்தைப்படுத்த வாய்ப்புள்ளது.

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

/உண்மை நகல்/

6.12.21

பிரிவு அலுவலர்

6.12.21